IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS.. No. | : | 111/2022 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | அமுதவாணி | CASTE | : | |
| D/O | நடராஜன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | டி. ஆண்டிப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.01.2026**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் எம்.ஏ.,பி.எட்., எம்.எஸ்.ஸி படித்துள்ளேன். இறந்துபோன ராமச்சந்திரன் என்னுடைய தாய்மாமா. 1ம் வாதி வேலை எதுவும் பார்க்கவில்லை. வீட்டில்தான் உள்ளார். நான் இறந்துபோன ராமச்சந்திரனின் நேரடி வாரிசு கிடையாது என்றாலும் அவரது சகோதரியின் மகள் என்றாலும் சரிதான். ராமச்சந்திரன் இறக்கும்போது அவருக்கு 85 வயது என்றால் எனக்குத்தெரியாது. அவர் எழுதியதாக சொல்லப்படும் உயில் ஊர்ஜிதம் செய்யப்பட்டால் அவரது பெரும்பாலான சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு வரும் என்றால் சரியல்ல.

2. ராமச்சந்திரனின் நேரடி வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குக்குறித்து நான்தான் எனது வழக்கறிஞருக்கு வழக்கு தாக்கல் செய்தமுதல் தற்போது வரை தகவல்கள் சொன்னேன். ராமச்சந்திரனின் மகன் சரவணன் 2020 ஆகஸ்ட் மாதம் கோவிட் சமயத்தில் இறந்தார் என்றால் சரிதான். வழக்குச்சொத்துக்கள் ராமச்சந்திரனுக்கு பூர்வீக பாத்தியம் என்றால் எனக்குத்தெரியாது. வழக்குரையில் வழக்குச்சொத்துக்கள் ராமச்சந்திரனுக்கு கிரையம் மூலம் பாத்தியம் என்று என்னுடைய முதல் விசாரணையில் ராமச்சந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்று மட்டும் குறிப்பிட்டுள்ள தகவல்களை யார் வழக்கறிஞருக்கு சொன்னது என்றால் நான் தான் சொன்னேன்.

3. ராமச்சந்திரன் இறப்பதற்கு 3 வருடம் முன்பாகவே சக்கரை வியாதி, மூட்டுவலி இரத்த அழுத்தம் வந்து நோய்வாய்பட்டு இருந்தார் என்றால் சரியல்ல. ராமச்சந்திரன் மேற்படி வியாதிகள் வந்து நடக்கமுடியாமல் இருந்தார் என்றாலும் நான் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவர் வீட்டில் தான் இருந்தார், ஆனால் நடக்கமுடியாமல் இருந்தார், வேறு வியாதிகள் இல்லை. உயிலில் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள ஆண்டி என்பவர் எங்கள் வீட்டில் வேலை செய்பவர் என்றாலும் ராமச்சந்திரன் எங்கள் உறவினர் என்றாலும் சரிதான்.

4. இறந்துபோன ராமச்சந்திரனுக்கு இறந்துபோன சமயத்தில் Medical Fitness Certificate எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். ராமச்சந்திரன் இறந்தபின் 1, 2 பிரதிவாதிகள் அவர்கள் பெயருக்கு வழக்குச்சொத்திற்கான பட்டாவை மாற்றும்வரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். இறந்து போன ராமச்சந்திரனுக்கு அவர் இறக்கும்வரை எனது அப்பா நடராஜன் தான் பணிவிடை செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் எனது அப்பா தான் தயார் செய்தார் என்றால் சரியல்ல, இறந்து போன ராமச்சந்திரன்தான் உயிலை தயார் செய்தார் அப்போது என்னையும் அங்கு அழைத்திருந்தார்.

5. எனது மாமா ராமச்சந்திரன் போன் செய்து வழக்கறிஞரை அழைத்துள்ளார், எனது அப்பாவிடம் வழக்கறிஞரை அழைக்குமாறு சொல்லியுள்ளார். எனது மாமா ராமச்சந்திரன் தனிப்பட்ட முறையில் அவராக வா.சா.ஆ.1 உயிலை தயார் செய்யவில்லை என்றால் வழக்கறிஞர் வைத்து தயார் செய்தார். எனது மாமா ராமச்சந்திரன் இறந்தபின் வழக்குச்சொத்துக்கள் எங்கள் பெயரில் வரி செலுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயிலில் சாட்சிகள் இருவரும் எங்களுக்கு வேண்டிய நபர்கள் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 உயிலில் ராமச்சந்திரன் கையெழுத்து செய்தததை பார்த்தபின்தான் சாட்சிகள் கையெழுத்து செய்தார்கள் என்பதை நிரூபிக்க வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் கண்டுள்ள சொத்துக்களை தவிர ராமச்சந்திரனுக்கு வேறு சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ.1 உயிலில் நிபந்தனையின் அடிப்படையில் 2 அயிட்ட சொத்துக்களை அனுபவம் செய்யமட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் காரணம் குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். அது எதற்காக நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்ற காரணம் தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது.

7. 1, 2 பிரதிவாதிகள் பட்டா மாறுதல் செய்யும்வரை வா.சா.ஆ.1 உயிலை நாங்கள் எங்கேயும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதுப்பற்றிய தகவலை யாருக்கும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல, 1ம் பிரதிவாதிக்கு தெரியும். இறந்துபோன ராமச்சந்திரன் வா.சா.ஆ.1 உயிலை எழுதவில்லை என்றாலும் அதில் உள்ளது அவர் கையொப்பம் இல்லை என்றாலும் அந்த காலத்தில் அவர் உயில் எழுதும் உடல்நிலை மற்றும் மனநிலை இல்லை என்றாலும் சரியல்ல. ராமச்சந்திரனின் சொத்துக்களை மோசடியாக அடைவதற்காக வா.சா.ஆ.1 உயிலை நாங்களாக உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 உயிலில் உள்ள கையெழுத்து இறந்துபோன ராமச்சந்திரனுக்கு உரியது தான் என்பதை நிரூபிக்க நான் தயாராக உள்ளேன். எனது அப்பா 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்கெனவே ஒரு வழக்கு தாக்கல் செய்து அது நடத்தாமல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.1 உயிலில் எழுதப்பட்டதாக சொல்லும் தேதிக்கு 4 மாதம் முன்புதான் ராமச்சந்திரன் மகன் இறந்தார் என்றாலும் அதனால் ஏற்பட்ட மனரீதியான அதிர்ச்சிக்கு அவர் மருத்துவம் பார்த்து கொண்டிருந்தார் என்றாலும் சரியல்ல.

9. வழக்குச்சொத்துக்களை எந்தகாலத்திலும் நாங்கள் அனுபவம் செய்ததில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ராமச்சந்திரன் இறந்தபின் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பட்டா ஏற்பட்டு அதை முறைப்படியாகத்தான் 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றாலும் அதன்படி 4ம் பிரதிவாதிதான் தற்போது அனுபவத்தில் உள்ளார் என்றாலும் அதனால் அந்த கிரையப்பத்திரத்தை ரத்து செய்ய முடியாது என்றாலும் சரியல்ல.

10. எனது பிராதில் நிரூபண வாக்குமூலத்திலும் வா.சா.ஆ.1 உயிலை யார் கைப்படஎழுதியது என்றும், யார் முன்னிலையில் படித்துக்காட்டப்பட்டது என்றும், யார்வசம் இருந்தது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது மாமா சொல்லச்சொல்ல வழக்கறிஞர் எழுதினார், அதை வழக்கறிஞர்தான் படித்துக்காண்பித்தார். உயிலின் நகல் ஒன்று 1ம் பிரதிவாதி வீட்டிலும் எங்கள் வீட்டில் ஒரு நகலும் இருந்தது. வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் எங்கள் வீட்டில்தான் இருந்தது.

11. எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் எனது மாமா இறந்தபின் வா.சா.ஆ.1 உயிலை யார் எங்கிருந்து எடுத்தது என்றும், யார் முன்னிலையில் படித்துக்காண்பிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்தபோன ராமச்சந்திரன் உயில் எழுதவில்லை என்றாலும் அவரது மகன் இறந்தபின் அவரது மகளுக்கு சொத்து செல்லக்கூடாது என்பதற்காக சொத்தை அபகரிக்க நாங்களே உயில் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. உயிலை ராமச்சந்திரன் எழுதியிருந்தால் அவரது அனைத்து சொத்துக்களுக்கும் எழுதியிருப்பார் என்றாலும் நாங்களாக அவசரமாக தயார் செய்ததால் தான் சில சொத்துக்களை விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல.

12. வழக்குச்சொத்து ராமச்சந்திரனுக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்பதால் அவரால் உயில் எழுதமுடியாது என்றாலும் வா.சா.ஆ.1 உயிலை அவர் எழுதவில்லை என்றாலும் வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதால்தான் பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடியாக விட்டுள்ளோம் என்றால் சரியல்ல. உயில் எழுதியதாக சொல்லப்படும் தேதி எனது மாமா மருத்துவக்கண்காணிப்பில் இருந்தார் என்றாலும் உயில் எழுதும் மனநிலையில் இல்லை என்றாலும் சரியல்ல.

13. பிராதுப்படி எனது மாமா வீட்டில் வைத்துதான் உயில் எழுதியதாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.